**கனோவின் ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கனோவின் ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் ("கம்பனி") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினை விடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு

அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உயர் மட்ட முகாமைத்துவத்தின் ஒப்புதலுடன் அமைப்பில் (கணனியில்) நியமமற்ற நாட்குறிப்பு பதிவுகளை அனுப்ப சரியான நடைமுறை இருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. ஏதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அமைப்பில் (கணனியில்) நாட்குறிப்பு பதிவுகளை அனுப்ப முறையான நடைமுறை இருக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (a.) | ஆர்கேட்டினுடைய நிறுவுதலுக்கான ஆரம்பச் செலவுக்காக முற்பணம் ரூபா.49,137,764 செலுத்தப்பட்டது. மற்றும் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் வழங்கல் மற்றும் 2018 & 2019 ஆண்டுகளின் பொதுத்துறைப் பணிகள் என்பன அடையாளங்காணப்பட்டும் மூலதனமாக்கப்பட்டும் இருந்திருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. இந்தப் பிரச்சனை கணக்காய்வுக் குழுவில் விவாதிக்கப்பட்டது. மேலும் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையுடன் ஒரு வெளிக்கள நிறுவனத்தால் மதிப்பீடு மேற்க்கொள்ளப்பட்டிருந்தது. அனைத்துச் சொத்துக்களையும் மூலதனமாக்க தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். | இது குறித்து முகாமைத்துவம் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (b.) | 2018 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருந்த பொருளாதார சேவைக் கட்டணம் ரூபா.505,327 ஆகும். எவ்வாறாயினும், வருமான வரிப் பொறுப்பு இருக்காத காரணத்தால் அடுத்த இரண்டு வருட காலத்திற்குள் இந்த நிலுவைத் தொகையை அடுத்தடுத்த வருமான வரி செலுத்துதலில் இருந்து மீட்க முடியாதிருந்தது. இந்தத் தொகையானது நிதிக் கூற்றுக்களில் தகுந்த சீராக்கங்களைச் செய்யாமல் 31 டிசம்பர் 2021 இல் முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டது. | 2018 ஆம் ஆண்டில் கணக்காய்வுப் பதிவாக ரூபா.505,327 பெற வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணத்திற்கு (ESC) எதிராக எதிரீடு செய்யப்பட்டது. மற்றும் பொருளாதார சேவைக் கட்டணத்தின் மீதமுள்ள இருப்பு 2019/2010 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி திரும்பலில் வரிக் கடனாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பொருளாதார சேவைக் கட்டணத்தை வசூலிக்க முகாமைத்துவம் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (c.) | பொதுப் பேரேட்டின் படி ஏனைய வழங்குனர்களினுடைய நிலுவைத் தொகைக்கு செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா.5,693,851 ஆக இருந்தது. எவ்வாறாயினும் வயதுப் பகுப்பாய்வின் படி மீதி ரூபா.5,813,401 ஆக இருந்தது. எனவே பொதுப் பேரேட்டிற்கும் வயதுப் பகுப்பாய்விற்கும் இடையே ரூபா.119,550 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது. அவ் வேறுபாடுகளுக்கான காரணங்கள் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. வித்தியாசம் ரூபா.597,501 இலிருந்து ரூபா.119,550 ஆக குறைக்கப்பட்டிருந்தது. மற்றும் மீதமுள்ள வேறுபாட்டை அடையாளம் காண தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முகாமைத்துவமானது வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களைச் செய்ய வேண்டும். |

## 1.6 கணக்கீட்டுப் பெற வேண்டியவைகளும் கொடுக்க வேண்டியவைகளும்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு 7(6) இன் படி, விலைப்பட்டியலினுடைய 14 நாட்களுக்குள் குத்தகை பெறுனரானவர் குத்தகை தருனருக்கு அனைத்து நிலுவைத் தொகையையும் செலுத்த வேண்டும் மற்றும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அடுத்த மாதத்தின் 20 ஆம் திகதியை கடக்கக் கூடாது. எவ்வாறாயினும் 10 குத்தகைதாரர்கள் ரூபா.24,842,365 நிலுவைத் தொகையினை 31 டிசம்பர் 2021 இல் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கோவிட் 19 தொற்று நோயின் சூழ்நிலைகள் அனைவரையும் பெரிதும் பாதித்தள்ளது மற்றும் பலருக்கு நிதி நெருக்கடியை உருவாக்கியள்ளது. மேலும், இலங்கை சுகாதார அதிகார சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடுகள் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், நாடு மூன்று மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்தது. இக் காலகட்டத்தில் குத்தகைதாரர்கள் வருமானத்தை ஈட்டவில்லை மற்றும் சில குத்தகைதாரர்கள் தங்கள் வணிகத்தின் நட்டம் காரணமாக வணிகத்திலிருந்து வெளியேறினர். எனவே அந்த சூழ்நிலையில் உரிய நேரத்தில் நிலுவைத் தொகையை வசூலிக்க எங்களுக்கு வாய்ப்பு இருக்கவில்லை. ஏற்கனவே உள்ள குத்தகைதாரர்களின் காலாவதியான நிலுவைத் தொகையை கருத்தில் கொண்டு,<br><br>"குத்தகைதாரர் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு (03) மாதாந்த வாடகையை செலுத்தத் தவறினால் வாடகை ஒப்பந்தம் தானகவே ரத்துச் செய்யப்பட்டு அத்தோடு பாதுகாப்புத் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படவும் மற்றும் எந்த நிபந்தனையும் அல்லது எந்த அறிவிப்பும் இல்லாமல் வளாகத்தை கையகப்படுத்தவும் கம்பனியின் முகாமைத்துவம் புதிய ஒப்பந்தத்தில் ஒரு குறிப்பிட்ட சரத்தை சேர்த்துள்ளது. | ஒப்பந்தங்களின் படி முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வழங்குனருக்கு செலுத்தப்பட்ட முற்பணத்தின் வயதுப் பகுப்பாய்வின் படி இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான மீதி ரூபா.1,413,723 ஆகும். கம்பனியால் கொள்முதல் செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளை வழங்குனர்கள் வழங்காததால் இது நிகழ்ந்துள்ளது. | குறித்துக் கொள்ளப்பட்டது, அந்த வழங்குனர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க கம்பனி முடிவுசெய்துள்ளது. | செலுத்தப்பட்ட முற்பணத்தை திரும்பப் பெற அல்லது வழங்குனர்களிடமிருந்து சேவைகளைப் பெற கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (a.) குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு 7(6) மற்றும் பிரிவு 8(e) | குத்தகை ஒப்பந்தத்தின் படி, விலைப்பட்டியலினுடைய 14 நாட்களுக்குள் குத்தகை பெறுனரானவர் குத்தகை தருனருக்கு அனைத்து நிலுவைத் தொகையையும் செலுத்த வேண்டும் மற்றும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அடுத்த மாதத்தின் 20 ஆம் திகதியை கடக்கக் கூடாது. மேலும், இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து ஏதேனும் தாமதமாக பணம் செலுத்தினால் சம்மந்தப்பட்ட விலைப்பட்டியல் திகதியிலிருந்து தாமதமான நாட்களின் எண்ணிக்கைக்கு நடைமுறையில் உள்ள வங்கிக் கடன் வீதங்களில் கணக்கிடப்பட்ட வட்டி வசூலிக்கப்படும். இருப்பினும் தாமதமான கொடுப்பனவுகளுக்கு நிறுவனம் வட்டி விதித்திருக்கவில்லை. | கோவிட் 19 தொற்று நோயின் சூழ்நிலைகள் அனைவரையும் பெரிதும் பாதித்தள்ளது மற்றும் பலருக்கு நிதி நெருக்கடியை உருவாக்கியள்ளது. மேலும், இலங்கை சுகாதார அதிகார சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடுகள் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், நாடு மூன்று மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்தது. இக் காலகட்டத்தில் குத்தகைதாரர்கள் வருமானத்தை ஈட்டவில்லை மற்றும் சில குத்தகைதாரர்கள் தங்கள் வணிகத்தின் நட்டம் காரணமாக வணிகத்திலிருந்து வெளியேறினர். எனவே அந்த சூழ்நிலையில் வட்டி விதிக்க எங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அதற்கு மேலதிகமாக தொற்றுநோய் நிலமை மற்றும் வீழ்ச்சியடைந்த வருமானம் என்பவற்றை கருத்தில் கொண்டு குத்தகைதாரர்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டியிருந்தது. | முகாமைத்துவம் ஓப்பந்தத்தின் உட்பிரிவுகளுடன் இணங்க வேண்டும். |
| (b.) 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதியிடப்பட்ட பொதுமுயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை எண்.01/2015(i) | சுற்றறிக்கையின் படி, உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரிமையுள்ள ஒரு அதிகாரி உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்த அல்லது மாதாந்த போக்குவரத்துப் படியாக ரூபா.50,000 பெற | குறித்துக் கொள்ளப்பட்டது, போக்குவரத்துப் படி இயக்குனர் சபையின் அனுமதியுடன் செலுத்தப்பட்டிருந்தது. அதன்பின், சிறப்புத் திட்டத்திற்கான முகாமையாளர் ஒப்புதலைப் பெறுவதற்குப் பதிலாக திறைசேரியிற்கு இயக்குனர் சபையின் முடிவை தெரியப்படுத்தினார். கனோவின் ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) | முகாமைத்துவம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். மற்றும் ஏதேனும் விலகல் இருந்தால் தொடர்புடைய அதிகாரியின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அவருக்கு விருப்புரிமை உள்ளது. எவ்வாறாயினும் மேற்கூறிய சுற்றறிக்கைக்கு மாறாக கம்பனி 2020 ஏப்ரல் முதல் பொதுத் திறைசேரியின் அனுமதியைப் பெறாமல் தலைவருக்கு மாதாந்த போக்குவரத்துப் படி ரூபா.100,000 செலுத்தியது. | லிமிட்டட் (கனோவின்) தெற்கு நெடுஞ்சாலையின் வெலிபன்னவில் உள்ள “கனோவின் ஆர்க்கேட்” என்ற நெடுஞ்சாலை சேவைப் பகுதியை நிர்வகிப்பதில் ஈடுபட்டுள்ளது. சேவைப் பகுதியை நிர்வகிப்பதிலுள்ள வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பவற்றை உறுதி செய்ய தலைவர் ஆர்க்கேட் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு செல்ல வேண்டும். தலைவரின் பயன்பாட்டிற்கு கம்பனியில் வாகனம் இல்லாத காரணத்தால், கம்பனியின் உத்தியோகபூர்வ பயணத்தின் நோக்கத்திற்காக தலைவர் தனது தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்தியுள்ளார். |

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பந்தி 7(2) இன் படி, கம்பனி, வருமான வரிக்கான கணக்கீட்டில் முதலீட்டு வருமானத்தை கருத்தில் கொள்ளவில்லை. எனவே மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான வருமான வரிப் பொறுப்பு ரூபா.1,978,853 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது, 2021/2022 ஆம் ஆண்டிற்கான வருமான வரிக் கணக்கைச் சமர்ப்பிக்கும் போது அது சரி செய்யப்படும் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான வருமான வரிக் கணக்கீட்டின் தாக்கத்தை அகற்ற 2022 ஆம் ஆண்டில் தேவையான சீராக்கங்கள் செய்யப்படும். மேலும் திரட்டப்பட்ட வரி விதிப்பு இழப்புகளை கருத்தில் கொள்ளும் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு (IRD) செலுத்த வேண்டிய வருமான வரிப் பொறுப்பு கம்பனிக்கு இல்லை என்பதை இதன் மூலம் உறுதி செய்கிறோம். | முகாமைத்துவம் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி வருமான வரியைக் கணக்கிட்டு செலுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.58,865,666 இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா.37,014,719 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா.21,850,947 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானமானது ரூபா.7,404,021 ஆல் அதிகரித்தமையும், செயற்பாட்டு வருமானமானது ரூபா.1,543,364 ஆல் அதிகரித்தமையும், முதலீட்டுச் சொத்தின் நியாய பெறுமதியில் ஏற்பட்ட மாற்றத்தால் நிகர இலாபம் ரூபா.10,510,375 ஆல் அதிகரித்தமையும், நிர்வாகச் செலவினங்கள் ரூபா.16,563,499 ஆல் குறைவடைந்தமையும் முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

| நிதிக் கூற்றுடன் தொடர்புடைய உருப்படி | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா.000) | 137,556 | 130,152 | 137,630 | 97,836 | 99,807 |
| வருமானத்தின் அதிகரிப்பு (குறைவு) (ரூபா.000) | 7,404 | -7,478 | 39,794 | -1,971 | 16,467 |
| வருமானத்தின் வளர்ச்சி (குறைவு) % | 5.7% | 5.4% | 40.7% | -1.8% | 19.8% |
| மொத்தலாபம் (ரூபா.000) | 109,856 | 109,179 | 102,946 | 63,933 | 61,761 |
| மொத்தலாபத்தின் அதிகரிப்பு (குறைவு) (ரூபா.000) | 677 | 6,233 | 39,013 | 2,172 | 27,273 |
| மொத்தலாபத்தின் வளர்ச்சி (குறைவு) % | .06% | 6.05% | 61.02% | 3.52% | 79.08% |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் (ரூபா.000)) | 2,290 | 747 | 5,303 | 17,266 | 5,610 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் அதிகரிப்பு (குறைவு) (ரூபா.000) | 1,543 | -4,556 | -11,963 | 11,656 | 895 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் வளர்ச்சி (குறைவு) % | 206.56% | -85.91% | -69.29% | 207.77% | 18.98% |
| நிதி வருமானம் (ரூபா.000) | 12,455 | 15,511 | 17,801 | 15,913 | 14,114 |
| நிதி வருமானத்தின் அதிகரிப்பு (குறைவு) (ரூபா.000) | -3,056 | -2,290 | 1,888 | 1,799 | 3,110 |
| நிதி வருமானத்தின் வளர்ச்சி (குறைவு) % | -19.70% | -12.86% | 11.86% | 12.75% | 28.26% |
| நிர்வாகச் செலவு (ரூபா.000) | 43,506 | 60,070 | 64,069 | 44,289 | 35,394 |
| நிர்வாகச் செலவின் அதிகரிப்பு (குறைவு) (ரூபா.000) | -16,564 | -3,999 | 19,780 | 8,895 | 13,709 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிர்வாகச் செலவின் வளர்ச்சி (குறைவு) % | -27.57% | -6.24% | 44.66% | 25.13% | 63.22% |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவு (ரூபா.000) | 13,639 | 13,581 | 2,129 | 8,759 | 1,918 |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவின் அதிகரிப்பு (குறைவு) (ரூபா.000) | 58 | 11,452 | -6,630 | 6,841 | 1,918 |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவின் வளர்ச்சி (குறைவு) % | 4.27% | 537.90% | -75.69% | 356.67% | 100% |
| வரிக்குப் பின் இலாபம் (ரூபா.000) | 58,865 | 36,015 | 41,751 | 54,595 | 49,370 |
| வரிக்குப் பின் இலாபத்தின் அதிகரிப்பு (குறைவு) (ரூபா.000) | 22,850 | -5,736 | -12,844 | 5,225 | 36,579 |
| வரிக்குப் பின் இலாபத்தின் வளர்ச்சி (குறைவு) % | 63.45% | -13.74% | -23.53% | 142.84% | 285.97 % |

## 2.3 விகித பகுப்பாய்வு

| விகிதம் | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|---|---|
| மொத்த இலாப விகிதம்(%) | 79.9% | 83.9% | 76.9% | 65.3% | 61.9% |
| மூலதனத்தின் மீதான வருவாய் (%) | 6.0% | 4.2% | 7.0% | 4.3% | 6.9% |
| நடைமுறை விகிதம் | 8.32:1 | 8.6:1 | 7.2:1 | 6.9:1 | 4.4 |
| விரைவு விகிதம் | 8.26:1 | 8.6:1 | 6.9:1 | 6.6:1 | 4.4 |
| இணைவு விகிதம் % | 10.4% | 9.9% | 6.7% | 8.5% | 7.3% |
| ஒரு பங்கு ஈட்டிய இலாபம் (EPS) | 0.68 | 0.43 | 0.48 | 0.63 | 0.57 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குழாய்க் கிணறுகளில் நீர் ஓட்டம் பற்றாக்குறையாக உள்ளமையினால் நிறுவனமானது ஆர்கேட் A மற்றும் B னுடைய பாவனைக்காக வாடகை அடிப்படையில் நீரை கொள்வனவு செய்து இருந்தது. நிதிக் கூற்றுக்களின் படி 2021 | குறித்துக் கொள்ளப்பட்டது, எங்களிடம் தண்ணீர் பெற இரண்டு குழாய்க் கிணறுகள் உள்ளன, ஆனால் அதன் இயலளவு தினசரி பயன்பாட்டிற்கு போதுமானதாக இல்லை. தற்போது ஒரு நாளைக்கு ஏறத்தாழ 150,000 லீற்றர் தண்ணீர் பாவனை உள்ளது, ஆனால் | சேவையின் தொடர்ச்சியான மற்றும் வினைத்திறனான தொழிற்பாட்டிற்காக முகாமைத்துவமானது வளாகத்திற்குரிய நிலையான மற்றும் தொடர்ச்சியான நீர் வழங்கலை உறுதி செய்ய |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டில் ரூபா.3,929,440 தொகை வளாகத்திற்கு தண்ணீர் வழங்குவதற்காக நிறுவனத்தால் கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. வளாகத்திற்குரிய நீர் வழங்கலின் பற்றாக்குறையானது ஆர்க்கேட்டின் வினைத்திறனான தொழிற்பாட்டிற்கும் ஆர்க்கேட்டால் வழங்கப்படும் சேவைகளுக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும். | இரண்டு குழாய்க் கிணறுகளிலிருந்து ஏறத்தாழ 100,000 லீற்றர் நீர் வெளியேற்றப்படுகிறது. ஆகையால், தண்ணீரினுடைய பற்றாக்குறைக்காக வாடகை அடிப்படையில் நாங்கள் தண்ணீரை கொள்வனவு கொள்வனவு செய்ய வேண்டும். மேலும், வெலிபென்ன சேவை வலயத்திற்கு குழாய் மூலம் நீர் பெற்றுக்கொள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, இது செயல்முறையின் கீழ் உள்ளது. | வேண்டும். |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) பெறுகை வழிகாட்டுதலின் 4.2.1 பந்தியின் படி பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது, எதிர்காலத்தில் இது போன்ற தவறுகளைத் தடுக்கும் வகையில் பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதை உறுதி செய்வோம். | முகாமைத்துவம் பெறுகை வழிகாட்டுதலின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (b.) பெறுகை வழிகாட்டுதலின் 2.7.5 பந்தியின் படி பெறுகைக் குழு நிறுவப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது, எங்கள் அமைப்பின் தன்னை மற்றும் திறனைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பெறுகையும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் (TEC) மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதன்பிறகு கம்பனியினுடைய நிதி ஆணையத்தின் பிரதிநிதித்துவத்தின் படி கொடுப்பனவுகள் அங்கிகரிக்கப்படுகின்றன. | முகாமைத்துவம் பெறுகை வழிகாட்டுதலின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (c.) இருப்பினும் பெறுகை வழிகாட்டியின் 5.4.4, ஒப்பந்தத் தொகையில் அதிகபட்சமாக இருபது சதவீதம் (20%) ஏற்கத்தக்க முற்பணம் உத்தரவாதமாக வழங்கப்பட வேண்டும் என்று கட்டுப்படுத்தப்பட்டாலும் கம்பனி ஒரு முன்கூட்டிய உத்தரவாதம் மற்றும் ஒப்பந்தத்தில் நுழையாமல் வழங்குனர் ஒருவருக்கு 60% முற்பணமாக ரூபா.4,350,000 ஐ வழங்கியுள்ளது. மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிகள் இன்னும் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | இயக்குனர் சபையின் ஒப்புதலின் படி வழங்குனர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க கம்பனி முடிவு செய்துள்ளது. அதே நேரத்தில் சட்டத்துறை அதை முன்னெடுத்துச் செல்லும். | வழங்குனரிடமிருந்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் அல்லது வழங்குனர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தால் 2021 நவம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயல்பாட்டு கைநூல் பிரிவு 3.3 இற்கு அமைய கம்பனிக்கான அனுமதிக்கப்பட்ட பணிநிலை விபரத்துடனான அனுமதிக்கப்பட்ட நிறுவன விளக்கப்படம் கிடைப்பனவுத்தன்மை அற்றதாக இருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது, முன்மொழியப்பட்ட பணிநிலை விபரம் (நிறுவன விளக்கப்படம்) மற்றும் ஆட்சேர்ப்புக் கொள்கை என்பவை கருத்துக்களுக்காக 27 யூன் 2022 அன்று நடைபெற்ற கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் கம்பனியின் முகாமைத்துவம் 28 யூலை 2022 அன்று நடைபெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்தில் கொள்கைத் தயாரிப்பை வெளிக்களம் செய்ய முடிவு செய்தது.<br><br>தாய் நிறுவனமான ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன், கம்பனியில் உள்ளகக் கணக்காய்வு நடத்தும் போது கம்பனிக்கான நிறுவனக் கட்டமைப்பை தயாரித்தது. இருப்பினும், கட்டமைப்பிற்கு இன்னும் சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன. முறையான பணி ஆய்வுக்குப் பிறகு கட்டமைப்பு முழுமை பெறும். குறித்துக் கொள்ளப்பட்டது, ஆரம்பத்தில் இருந்தே சரியான கட்டமைப்பு எதுவும் இல்லாததால் முன்மொழியப்பட்ட பணிநிலை விபரத்திற்கும் தற்போதுள்ள ஊழியர்களுக்கும் வித்தியாசம் உள்ளது. தேவையான எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கும் பதிலிடங்களுக்கும் இடையே வேறுபாடு உள்ளது. மேலே கூறப்பட்ட சிக்கலைத் தீர்க்க தற்போதைய இயக்குனர் குழு ஏற்கனவே கூடியிருக்கிறார்கள். | பெருநிறுவன ஆளுகைக்கான வழிகாட்டுதல்களின் ஏற்பாடுகள் மற்றும் அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயல்பாட்டு கைநூல் என்பவற்றிற்கு அமைய அனுமதிக்கப்பட்ட பணிநிலை விபரத்துடனான அனுமதிக்கப்பட்ட நிறுவன விளக்கப்படத்தை கம்பனி கொண்டிருக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பெருநிறுவனத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான பெருநிறுவன ஆளுகைக்கான வழிகாட்டுதல்களின் 5வது அத்தியாயத்தின் இணைப்பு 1 இற்கு அமைய நிறுவனமானது பெருநிறுவனத் திட்டத்தை தயாரித்து இருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது, கம்பனியின் முகாமைத்துவம் 28 யூலை 2022 அன்று நடைபெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்தில் கொள்கைத் தயாரிப்பை வெளிக்களம் செய்ய முடிவு செய்தது. தேவையான பணி ஆய்வுகளுக்குப் பிறகு கம்பனிக் கொள்கைகளைத் தயாரிக்கவும் மேம்படுத்தவும் கம்பனிகளிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டன. நிபுணத்துவ அறிவின் உதவியுடன் நிறுவன அமைப்பு, ஊதிய அமைப்புடன் கூடிய ஆட்சேர்ப்பு கொள்கை, செயல் திட்டம் மற்றும் பெருநிறுவனத் திட்டம் ஆகியவற்றைத் தயாரித்து மேம்படுத்த முகாமைத்துவம் முடிவு செய்தது. | வழிகாட்டுதலின் விதிகளின் படி கம்பனி ஒரு பெருநிறுவனத் திட்டத்தை வைத்திருக்க வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏப்ரல் 2018 இல் இருந்து உள்ளகக் கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு செயல்பாடுகளை ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசனினுடைய கணக்காய்வு பணியாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசனினுடைய கணக்காய்வு திணைக்களம் எதிர்காலத்தில் அவ்வப்போது கணக்காய்வை மேற்க்கொள்ளும். | இயக்குனர் சபையானது கம்பனிக்கான வினைத்திறனான கணக்காய்வு செயல்பாடுகள் இடம்பெறுவதனை உறுதி செய்ய வேண்டும். |

### 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தால் 2021 நவம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயல்பாட்டு கைநூல் மற்றும் பெருநிறுவன ஆளுகைக்கான வழிகாட்டுதல்களின் பிரிவு 4.2(h) இற்கு அமைய இந்தக் குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டும். எவ்வாறாயினும் 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் கணக்காய்வுக் குழுவை நடாத்துவதற்கு கம்பனி வசதி செய்திருக்கவில்லை. | கம்பனி கணக்காய்வுக் குழுவிற்கு (AC) உறுப்பினர்களை நியமித்துள்ளது. மற்றும் தற்போது கணக்காய்வுக் குழு கூட்டங்கள் தேவைக்கேற்ப அவ்வப்போது நடத்தப்படுகின்றது. | கணக்காய்வுக் குழுவின் வினைத்திறனான செயல்பாட்டினையும் மற்றும் கம்பனியின் விவகாரங்களை மேற்பார்வையிடுவதையும் இயக்குனர் சபை உறுதி செய்ய வேண்டும். |

### 4.4 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தால் 2021 நவம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான பெருநிறுவன ஆளுகைக்கான வழிகாட்டுதல்களின் 5வது அத்தியாயத்தின் இணைப்பு 1 இற்கு அமைய முக்கிய செயற்பாடுகளுக்காக ஒரு முதன்னைப் பாதீடு மற்றும் தனியான பாதீடு என்பன கம்பனி வைத்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் கம்பனி மதிப்பிடப்பட்ட ஆண்டிற்கான பாதீட்டு வருமானக்கூற்று, பாதீட்டு நிதி நிலமைக்கூற்று மற்றும் பாதீட்டு காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றைத் தயாரித்திருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது, பாதீட்டு காசுப்பாய்ச்சல், பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் பாதீட்டு மூலதனச் செலவீனங்கள் என்பவற்றை உள்ளடக்கிய பாதீட்டை நடைமுறைப்படி நாங்கள் தயாரித்துள்ளோம். 2021 நவம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான பெருநிறுவன ஆளுகைக்கான வழிகாட்டுதல்களின் 5வது அத்தியாயத்திற்கு அமைய 2023 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்படும். | கம்பனியின் செலவீனங்களை முறையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முகாமைத்துவத்தை செயல்படுத்தும் வகையில் வினைத்திறனான பாதீட்டு கட்டுப்பாடு கம்பனிக்குள் இருப்பதை இயக்குனர் சபை உறுதி செய்ய வேண்டும. |